சாத்திரம், தோத்திரம் ஆகிய இந்த இரண்டும் இணைந்து நம் உள்ளத்தில் செல்லும் போது பக்தியே ஞானமாகவும், ஞானமே பக்தி யாகவும் பரிணமித்து இயங்கக் காண்கிறோம்! அந்த இயக்கத்தில் விதியும் காலமும் சுழன்றோடுவதும், விதியின் எழுத்து அழிவதும், காலம் என்ற தத்துவம் தனது சுழற்சியை நமக்கு நன்மை பயக்கும் விதத்தில் மாற்றிக்கொண்டு சுழல்வதும் நிகழ்கின்றன. அப்போது 'ஊழை உப்பக்கம்' காணுகின்ற உளுற்றுதல் என்ற செயல் ஒரு தவச் செயலாகத்திகழ்கிறது.

'தாழாது உளுற்றுதல்' என்னும் இந்தத் தவத்திற்கு நம்மை அழைத்துச் செல்வதே அவ்வையின் நூல்கள் எழுந்ததன் குறிக்கோள் ஆகும்.

3. அகவலின் ஆற்றல்

விநாயகர் அகவல் ஒரு புகழ் நூல். அதாவது விநாயகரின் பெருமைகளைச் சொல்லிப் புகழ்ந்து துதிக்கின்ற முறையில் அமைந்த நூலாகும்.

பாமாலை நூல்களின் ஒரு மரபானது, போற்றுகிற தெய்வத்தின் வல்லமைகளை வரிசையோடு கூறி வணங்குவதாகும். 'போற்றி போற்றி' என்று முடியும் வரிகள் அமைந்த நூல்களும் இந்த வகையில் அடங்கும்.

அகவல் என்ற பாவினம் போற்றித் துதிக்கும் இந்த மரபுக்கு இசைந்த யாப்பு முறை கொண்டதாகும். மாணிக்கவாசகர் போன்ற ஞானப் புலவர்களும், சித்தர் என்ற பெயரில் வழங்கி வருகிற பல கவிஞர்களும் இவ்வகையான புகழ் மாலைக்கு அகவல் யாப்பைக் கையாண்டு இருக்கிறார்கள்.

அகவல் எனினும், அகவுதல் எனினும் மனம் ஒடுங்கிய நிலையில் ஓதுதல் என்று பொருள் படும். சொல்லுதல் அல்லது மொழிதல் என்பதைவிட அகவுதல் என்ற சொல்லுக்கு இப்படி ஒரு சிறப்பான பொருள் உண்டு. வழிபடுகின்ற கடவுளிடம் மனம் திறந்து ஓதுகின்ற செயலுக்கு, இந்த அகவலின் யாப்பு மிகவும் பொருந்தியது என்பதைப் புலவர் உலகம் பலநூறு ஆண்டுகளாகக் கண்டு கடைப்பிடித்து வந்திருக்கிறது. அவ்வையாரும் தமது விநாயகர் புகழ் மாலைக்கு இநத மரபை ஒட்டியே அகவல் முறையைப் பயன்படுத்தியுள்ளார்.

விநாயகருடைய பெருமைகளை எடுத்துச் சொல்வதோடு, யோகிகள் வழிபடுகின்ற ஞானச் சின்னங்களை வரையறை செய்து வகுத்துக் கூறுவதும், விநாயகர் அகவலின் தனிப்பெரும் சிறப்பாகும். திருமுருகாற்றுப்படை என்னும் நக்கீரர் படைப்பிலும் இந்த நுட்பங்கள் நன்கு பயின்று வருவதைப் புலவர் உலகம் நன்கு அறியும்.

சித்தர்களின் ஞான நுட்பங்களைத் தன்னுள் அடக்கியுள்ள நூல் என்பதோடு கூட, அவ்வையாரின் விநாயகர் அகவல் வேறு சில தனிப் பெருமைகளையும் தன்னுள் பொதிந்து திகழ்கிறது.

முதலாவது சிறப்பு, விநாயகர் அகவலின் மொழி எளிமையாகும். இரண்டாவது சிறப்பு, அதனுடைய இசைப்பண்பாகும். மூன்றாவது சிறப்பு, அதனுடைய மந்திர ஆற்றலாகும்.

மொழிச்சிறப்பு என்பது அதன் எளிமையில் எப்படித் துலங்குகின்றது என்றால், அதனுள் பயின்று வருகிற சொற்கள் மக்கள் சமுதாயத்தின் எல்லா நிலைகளிலுமுள்ள மாந்தரின் வழக்கிலுள்ள உயிர்ச் சொற்களாம்.

எந்த மொழியிலும் எந்தக் காலத்திலும் இறவாத சொற்கள் என்று சில அடிப்படையான சொற்கிளவிகள் உண்டு. இந்தச் சொற்கள் மக்களுடைய நாவிலே ஆண்டாண்டுகளாகப் பழகு தமிழாக வழங்கி வழங்கி, அவற்றின் எளிமைக்குள்ளே ஓர் உயிர்ப்பு வேகம் அல்லது உயிரொளி தோன்றுகிறது. எவ்வாறு நெருப்பிலே கங்கு கனலுகிறதோ அவ்வாறு இந்தச் சொல் ஒவ்வொன்றும் ஒரு சொற்கங்காக என்றென்றும் அணையாது அவியாது நின்று கனல்கிறது. எனவே அது ஓதுகின்றவனுடைய சொல் மூச்சுக் காற்றிலே அதனுடைய கனல் வேகத்தை அதிகரித்துக் கொள்கின்றது. விசிறி வைத்து வீசும்போது எப்படி ஒரு கங்கானது பொறி தெறித்து அனலை உமிழ்கிறதோ, அவ்வாறே, இந்தச் சொற் கங்கும் மொழியாற்றலைத் தீப்பொறி போன்று ஓதுகிறவனுடைய சொற்காற்றினால் கக்குகிறது. இது அந்தப் பாடலின் சொல்லிலே உள்ள எளிமையின் சிறப்பாற்றலாகும்.

இனி, இந்த எளிமைக்கு இன்னொரு வேகமும் இருக்கிறது. ஓதுகின்ற மனிதன் எந்த மூர்த்தியை நினைத்து இந்த பாடலை ஓதுகின்றானோ அந்த மூர்த்தியின் முழுவடிவமும் அவனுடைய மனக்கண்ணிலே தோன்றும் வண்ணம் சொற்களின் வருணனை கைகொடுத்து உதவுகிறது. ஓதுகின்ற மொழி அவனுடைய தாய்மொழியாக இருப்பதாலும், ஓதுகின்ற சொற்கள் எளிதிலே பொருள் கொள்ளக் கூடியனவாக இருப்பதாலும், பாடலின் ஒவ்வொரு வரியை ஓதும் போதும் அந்த வரி சித்திரிக்கிற உருவமானது மனக்கண்ணின் முன்னால் படம் போன்று விரிகிறது. விரிகின்ற இந்தப் படத்திலே மனம் கவிவதால், ஓதுகின்ற உள்ளத்தின் ஈடுபாடு மேம்பட்டு உணர்ச்சியிலே முனைந்து கூடுகிறது. அப்படிக் கூடும்பொழுது அந்தத் தோத்திரம் வலிமை பெறுகிறது. இது அந்த எளிமையினால், ஏற்படுகின்ற இன்னொரு பெரிய ஆற்றலாகும்.

பதஞ்சலி முனிவர் தமது யோக சூத்திரத்தில் இறைவழி பாட்டில் மொழியின் முக்கியத்தை வற்புறுத்துகிறார். வழிபடுகிறவன் தான் ஓதுகிற மொழியின் பொருளை நன்கு உணர்ந்து கொள்ளும் பொழுது, அவனுடைய ஓதுதலில் 'மூர்த்திகரம்' என்னும் இறைமை, வன்மை அடைகிறது. இதனை யோக சூத்திரத்தின் விளக்கத்திலே, தேசிய மகாகவி சுப்பிரமணிய பாரதியார் விரிவாக எடுத்துச் சொல்லியிருப்பதை, வேறொரு கட்டத்தில் முதற் பகுதியிலே நாம் பார்த்திருக்கிறோம். எனவே, விநாயகர் அகவலின் மொழியும் அதனுடைய எளிமைப் பொருள்கோளும் இணைந்து, இந்த இறைமைக்கு ஊட்டம் தருகின்றன என்பது மேலும் ஒரு சிறப்பாகும்.

விநாயகர் அகவலை ஓதுகிற ஒரு பக்தனுக்கு இந்தப் பாடலின் தாய்மொழிப் பண்பும் எளிமைப் பாங்கும் இன்னொரு பெரிய நற்பலனைத் தருகின்றன. தான் வணங்குகின்ற தெய்வத்தின் சிறப்புக்களும் அணிகளும் காட்சியின் கோலங்களும் கண்முன் வந்து நிற்பதால், அவனுடைய ஈடுபாடு அதிகமாவதோடு கூட, உள்ளத்திலே வழி பாட்டுக்கு வேண்டிய உருக்கம் தானாகவே இழையத் தொடங்குகிறது. இதன் காரணமாக வழிபாட்டின் பயன், வேகமும் விரைவும் கொள்கிறது.

மேலே கண்டவாறு வேகமும் விரைவும் ஏற்படும் பொழுது பக்தனுடைய எண்ணங்களிலே தெளிவு பிறக்கிறது. யாரிடம் எதை எவ்வாறு சொல்லுகிறோம் என்னும் முழு நினைவோடும், முழு உணர்ச்சியோடும், பாடலை ஓதுகிறான் பக்தன்.

இத்தனை பயன்களும் ஒன்று சேர்வதால், வழிபடுகின்ற பக்தனுடைய உள்ளத்திலிருந்து சொற்களோடு சேர்ந்து, தெளிவான எண்ணங்கள் அக உடலின் ஆழத்திலிருந்து எழுந்து வருகின்றன. அப்படி எழுந்து வரும்பொழுது, வழிபாட்டுக்கு இன்றியமையாத 'உள்ளுதல்' என்ற உணர்வு நிலையின் ஆட்சி முழுமை பெறுகிறது. எனவே, அவன் தனது வழிபாட்டின்பொழுது மனத்தை ஒருமைப் பாட்டுடன் குவியச் செய்வது நன்கு கைகூடுகிறது. உள்ளத்தின் ஆழத்திலிருந்து புகழ்மாலையின் சொற்களும் வேண்டுதலின் எண்ணங்களும் இரண்டறக் கலந்து நிற்கும் நிலையிலே, விநாயகரின் திருவடிகளிலே மலர்கள் போன்று தூவப் பெறுகின்றன. எண்ணங்கள் வேறிடத்தில் சிதறுவதில்லை.

இவையனைத்தும் தாய்மொழியின் அமைப்பும் அதன் எளிமையும் தருகின்ற பேராற்றல்களும் நற்பயன்களுமாம்.

இனி, மொழியின் இசைப்பண்பு எப்படி அமைந்துள்ளது என்பதைப் பார்த்தால் அவ்வையாரின் கவியாற்றலானது வழிபாட்டுக்கு எங்ஙனம் துடுப்பு வீசுகிறது என்பதை உணரலாம்.

அகவலினுடைய யாப்புமுறை, அதில் பயின்று வந்துள்ள சொற்களைப் போன்றே மிகவும் எளிமையானதாகும். அதனுடைய தாள அமைப்பு எளிய கட்டுக்கோப்பு கொண்டது. அகவுதல் என்ற சொல்லுக்கு ஏற்பப் பின்னுதல், புரட்டுதல், பாய்தல் போன்ற சிக்கல்கள் ஏதுமின்றி, ஓதிக்கொண்டே போகக்கூடிய தாள அமைப்புக் கொண்டதே அகவல் என்னும் பாவினம்! இதனால் விநாயகருடைய பெருமைகளை மேலே மேலே அடுக்கிச் செல்லும் போது ஓதுகிறவனுடைய உள்ளம் அந்த யாப்பின் அமைதியிலே இரண்டறக் கலந்து விடுகிறது. நிஷ்டை என்றும், ஒருமைப்பாடு என்றும், ஒன்றுகூடல் என்றும் சொல்லுகிற மனஒடுக்கம் இந்த இசைப்பண்பினால் சிக்கலின்றிக் கைவந்துவிடுகிறது. இது அந்தப் பாடலின் தாள அமைப்பும் தளைகளின் இசைப்பண்பும் சேர்ந்து கூட்டுவிக்கின்ற ஞான சாதனை.

இந்த இசைப் பண்பினால் விளைகிற இன்னொரு பயன் அதனுடைய ஒலி அதிர்வாகும்.

மொழிக்கு முதற்காரணம் இலக்கண ஆசிரியர்கள் கூறியவாறு ஒலியின் அணுத்திரளே ஆகும். அந்த நிலையிலே ஆராய்ந்து பார்தோமானால் அகவற்பாவின் இசைப்பண்பு எளிமையோடு பொலிவையும் உள்ளடக்கிய ஒலி அதிர்வாகும். ஆற்றொழுக்காகச் செல்கிற ஒலி அலைகளை எழுப்புகிற தாள அமைப்பு வெண்தளைக்கு இருப்பதால், இந்தப் பாடலை ஓதும்பொழுது உணர்ச்சியின் செறி வானது அலை அலையாக எழுந்து பெருகுகிறது. அப்படிப்பெருகும் பொழுது உள்ளத்தின் உணர்ச்சி அலைகள் நமது உடம்பைச் சுற்றி நிற்கின்ற வான அணு உடலின் அலைகளை அசைக்கத் தொடங்குகின்றன. அப்போது அகமும் புறமும் இணைந்து ஒலிக்கத் தொடங்குகின்றன.

ஒரே சுதியில் சேர்க்கப் பெற்ற இரண்டு இசைக் கருவிகளில் ஒன்று ஒலிக்கத் தொடங்கியதும் எவ்வாறு அடுத்ததும் தானாகவே ஒலிக்கத் தொடங்குகிறதோ, அவ்வாறே, இணை ஒலி என்ற இயற்பியல் விதியின் படி அகமும் புறமும் விநாயகர் வழிபாட்டிலே இணைந்து ஓதத் தொடங்குகின்றன. இப்படி இணைவதுதான் சித்தர்கள் கூறுகிற ஒடுக்கநிலை என்பது.

யோகத்தில் அமரும்போது சமாதி என்னும் ஒடுக்கநிலை எப்படி ஒரு சித்தனுக்கு கூடுகிறதோ அவ்வாறே ஒரு பக்தனுக்கு அவனுடைய வழிபாட்டின்போது மன மண்டலத்திலே ஒடுக்க நிலை கூட வேண்டும் அப்படிக் கூடினால் தான் அவனுடைய வழிபாடு முழுமை பெறுகிறது இந்த முழுமை பெறும் நெறிக்கு விநாயகர் அகவலின் இசைப்பண்: பக்தனை ஆற்றுப்படுத்தி விநாயகரின் திருவடிகளிலே மனத்தை ஒடுங்கும் படி செய்கிறது.

மொழியும் இசைப்பண்பும் இத்தனை சிறப்பு இயல்புகள் கொண்டு திகழ்வதோடு கூட, அவ்வையின் விநாயகர் அகவலிலே இன்னொரு மாபெரும் சிறப்பு வியக்கத்தக்க விதத்தில் அமைந்து பொலிகிறது! அதுதான் அதனுடைய மந்திர ஆற்றல் என்பது.

மொழியும் இசையும் மன உலகத்தின் பாற்பட்டவை. மந்திர ஆற்றல் என்பதோ ஆன்ம உலகின் பாற் பட்டது.

உள்ளத்தின் அதிர்வுகள் அகமும் புறமும் இணைந்து ஒடுங்கச் செய்வது போலவே, தனி உயிரையும் பரம் பொருளாகிய பேருயிரையும் இணைக்கவல்ல ஆற்றல் செயற்படுகிற களம், ஆன்ம உலகமே ஆகும்.

மொழியும் இசையும் உள்ளத்தில் அதிர்வை உண்டாக்கி உணர்ச்சி அலைகளை எழுப்புகின்றன. அவ்வாறே ஒரு சொற்றொடரின் மந்திர ஆற்றலானது, ஆன்ம உலகிலே நுண் அதிர்வுகளை விளைத்துத் தனி ஆன்மாவையும் பேரான்மாவையும் ஒருமைப்பாடு என்னும் ஒடுக்க நிலைக்கு உய்க்கிறது. இது பிற ஆற்றல்களைப்போல்அல்லாது, மிகவும் நுண்ணிய முறையிலே இயங்குகின்ற நுட்பமான ஒலி ஆற்றலாகும்.

எல்லா மொழிகளும் ஒலி அலைகளை எழுப்புகின்றன. ஆனால் அவையெல்லாம் மந்திர ஒலிகள் ஆகா நிறைமொழியும் மறைமொழி

யும் தருகின்ற ஆணையிற் கிளக்கும் அதிர்வுகள் ஒப்பற்ற தனியாற்றல் கொண்டவை. அந்த் ஆற்றலுக்குத்தான் மந்திர ஆற்றல் என்று பெயர்.

ஒரு சாதாரணச் செய்யுளில் விளைகின்ற ஒலி அலைகளுக்கும் ஒரு மந்திரத்தில் விளைகின்ற ஒலிஅலைகளுக்கும் ஓர் அடிப்படையான வேறுபாடு என்னவென்றால், முந்தைய ஆற்றல்கள் அறிவும் உணர்ச்சியும் சேர்ந்து தொழிற்படுபவை. மந்திர ஆற்றலோ அறிவினாலும் உணர்ச்சியினாலும் அளக்க முடியாததும் ஆராய்ந்து பார்த்துப் புரிந்து கொள்ள முடியாததுமான ஓர் இணையற்ற இறையாற்றலாகும். உள்ளத்தையும் உணர்வையும் கடந்த ஆற்றலாக இருப்பதால் சித்தர்கள் இதை இறையாற்றல் என் று அழைத்தார்கள்.

இந்த இறையாற்றலானது புரிந்துகொள்ளக் கூடியதும் அளவை செய்யக் கூடியதுமான மொழிக்குள்ளே தான் உறைகிறது. ஆனால், இந்த இரண்டையும் கடந்து நிற்கிறது அது. கட்டுபாட்டுக்குள் அடங்கிய உடம்பிலும் உள்ளத்திலும் இருக்கும் இறைவன், எப்படி இந்தக் கட்டுபாடுகளைக் கடந்தவனாக இருக்கிறானோ அவ்வாறே, இந்த மந்திர ஆற்றலும் மொழிக்குள்ளே பதிந்த போதிலும் மொழியின் எல்லையைக் கடந்து இயங்குகிறது. இதுவே தனி உயிரைப் பேருயிரோடு பிணைக்க வல்ல மாபெரும் உயிராற்றலாகும்.

அவ்வையின் விநாயகர் அகவலிலே இந்த மந்திர ஆற்றலானது கம்பியில் ஓடுகின்ற மின்சாரம் போன்று அகவலின் ஒவ்வொரு வரியிலும் ஓடுகிறது. இந்த ஆற்றலினால், இதை ஓதுகின்ற மனிதனின் உள்ளம் மின்குமிழ் (Bulb) போன்று ஒளிர்கிறது. அவனுடைய உடலைச் சுற்றியுள்ள ஒளி உடம்புக்குள்ளே ஓடி கலக்கிறது. இந்த இரண்டும் இணைந்து விநாயகராகிய பேரொளிப் பிழம்பிலே ஒடுங்கக் கூடிய நெறியிலே அகவல் செல்கிறது. இந்த மின் ஆற்றலே விநாயகர் அகவலின் மாபெரும் வழிபாட்டு மாண்பாகும்.

ஆன்ம ஒலி அதிர்வு என்றும், ஆன்ம ஒளிவீச்சு என்றும் செவிப்புலனோடும், கட்புலனோடும் இணைந்த முறையிலே சித்தர்கள் ஞான ஆற்றலை விளக்குவது உண்டு. தொண்டு நெறியின் வாயிலாகவும், நன்மகவு நெறியின் வாயிலாகவும், நட்பு நெறியின் வாயிலாகவும், செந்நெறியின் வாயிலாகவும் இந்த ஞான ஆற்றலை வளர்த்துக்கொள்வதற்குச் சித்தர் இலக்கியங்கள் எத்தனையோ பல பயிற்சிகளை எடுத்துச் சொல்கின்றன. இந்தப் பயிற்சிகளில் கடினமானவை, மிகவும் கடினமானவை என்றும், எளியவை மிகவும் எளியவை என்றும் அழைக்கப் பெறுகிற பல பயிற்சிகளை நாம் காணலாம். இவை அனைத்திலும் மிகவும் எளிமையான முறைகளிலே ஒன்றுதான் தோத்திர நூல்களை ஓதுவதாகும்.

அப்படி எளிய முறையிலே ஞான ஆற்றலைப் பெருக்குவதற்கு என்று தோன்றிய நூல்களிலே விநாயகர் அகவலானது மிக எளிமையிலும் எளிமையான ஒரு மாண்பார்ந்த நூலாகும். ஏனென்றால் ஞானப் பேருண்மைகளைத் தன்னுள் அடக்கியுள்ளதோடு, மொழி எளிமையும் இசை எளிமையும் கொண்டு திகழ்கிறது இந்த அரிய நூல்.

அதனோடு கூட, மின்கலத்தில் நிறைந்துள்ள மின் ஆற்றலைப் போன்று இந்த நூலின் கண் மந்திர ஆற்றல் கரந்து நிற்பதால், எளிமையான வழிபாட்டின் மூலம் மிகவும் கடினமான ஞானப் பயிற்சிகளிலே விளைகின்ற நற்பலன் நமக்குக் கிட்டிவிடுகின்றது.

மந்திர ஆற்றல் என்ற மாபெரும் வல்லமையானது எளிமையான சொற்களின் வழியாக எளிமையான இசையின் வாயிலாக நம்மை விநாயகரின் பால் ஈர்த்துப் பிணைக்கின்ற மின்தொடர்பாக இயங்குகிறது. இக்காரணம் பற்றியே பெரிய பெரிய பயிற்சிகளிலே ஈடுபட்டுள்ள ஞானயோக சித்தர்களும் அவ்வையாருடைய விநாயகர் அகவலை மிகுந்த ஆர்வத்துடன் போற்றிப் பேணி வந்துள்ளதோடு, மாணவர்களுக்கும் அவர்களுடைய தோத்திரப் பயிற்சிக்கு உறுதுணை என்று சொல்லி வழங்கி வந்துள்ளார்கள்.

அவ்வையின் குறளைப் போலச் சித்தர் உலகத்தின் ஆர்வத்திற்க்கும் பயிற்சிக்கும் நிலைக்களனாக நிலவி வந்துள்ள இந்த அரும்பெரும் நூலின் வழிபாட்டுச் சிறப்பு இங்ஙனம் திகழ்கிறது. இனி, இந்த நூலின் உட்கிடையான ஞான உட்பொருளை , விநாயக தத்துவத்தை ஆராய்ந்து பார்ப்போம்.

4. விநாயகர் வழிபாடு

விநாயகர் அகவலின் உட்பொருளை ஆராய்வதற்குத் துணையாக, நம் தமிழகத்தில் நிலவும் விநாயகர் வழிபாடு எவ்வாறு வழங்கி வந்துள்ளது என்னும் பக்தி மரபையும், இந்த வழிபாட்டின் விதிமுறைகளை நம் பெரியோர்கள் எவ்வாறு கடைப்பிடித்திருக்கிறார்கள் என்ற வராலாற்றையும் ஆராய்வது அவசியமாகும். இந்த மரபையும் விதிமுறைகளையும் ஒட்டி அவ்வையார் தமது அகவலை யாத்திருக்கிறார் என்ற மாண்பைக் காணுவதற்கும், பாடலின் மொழிகளுக்குள்ளே எத்தகைய புகழ்மரபு பொதிந்திருக்கிறது என்பதைக் காணுவதற்கும், இந்த ஆய்வு நமக்குத் துணை செய்யும்.

விநாயகன் என்னும் வடசொல்லுக்கு, தனக்கு மேல் ஒரு தலைவன் இல்லாதவன் என்பது பொருளாகும். அதாவது, தானே தனிப்பெரும் தலைவன், தானே முழுமுதற்கடவுள் என்பது பொருள்.

தமிழகத்தில் வழங்கி வருகின்ற எல்லாப் பூசனை முறைகளிலும் எந்த ஒரு வழிபாட்டின் தொடக்கத்திலும் விநாயகனைத் துதிப்பது ஒரு மரபாக நிலவி வருகிறது. தமிழ் மந்திரங்களைக் கடைப்பிடிப்பவர்களும் வடமொழி மந்திரங்களை கடைப்பிடிப்பவர்களும் இரு சாராருமே இந்த மரபைத் தவறாமல் ஆண்டு வந்திருக்கிறார்கள்.

இன்றைக்கும் நமது வீடுகளில் வழங்கிவருகின்ற பூசை முறை களிலும், இந்த மரபையே நாம் கண்ணும் கருத்துமாகப் போற்றி வருகிறோம்.

புதுமனை புகும் விழாவிலும், திருமண விழாக்களிலும் மற்றும் பல பண்டிகைகளிலும் வேள்வித்தீ வளர்க்கும் போது, தொடக்கத்திலேயே விநாயகரை வணங்கித்தான் பூசையைத் தொடங்குகிறோம்.

சுக்லாம் பரதரம் விஷ்ணும் சசிவர்ணம் சதுர்புஜம்

என்று தொடங்குகிற விநாயகர் வழிபாட்டுச் செய்யுள் நமது நாட்டில் மிகவும் புகழ் பெற்றதாகும். சுக்லம் என்ற வட சொல்லுக்கு வெண்மை என்று பொருள். அம்பரம் என்றால் ஆடை; வெண்ணிற ஆடை அணிந்தவரும், சந்திரனைப்போன்று வெண்ணிறம் கொண்டவரும் (சசிவர்ணம் - சந்திரனுடைய நிறம். சசி- சந்திரன்), நான்கு கைகள் கொண்டவரும் என்பதாக இந்த வணக்கச் செய்யுள் தொடங்குகிறது.

வடமொழி மந்திரங்களை ஓதுகின்ற உபாசகர்கள் 'கஜானனம் பூத கணாதி சேவிதம்' என்று தொடங்குகின்ற பாடலை ஆரம்பத்தில் சொல்லித்தான் தங்கள் மந்திரங்களைத் தொடங்குகிறார்கள்.

தமிழ்மொழியிலும் விநாயகருக்கு உரிய பாடல்களைப் பாடியேச் சடங்குகளை ஆரம்பிப்பது வழக்கமாக உள்ளது.

தன்தோள் நான்கின் ஒன்று கை மிகூஉம்
களிறு வளர் பெருங் காடாயினும்
ஒளிபெரிது சிறந்தன்று அளியவென் நெஞ்சே

என்னும் பாடல் மிகப் பழைய தமிழ்ப் பாடல்களுள் ஒன்று. தொல்காப்பியம் செய்யுளியல் ஐம்பத்திரண்டாவது சூத்திரத்தின் இளம்பூரணத்திலே இந்த பாடலை பார்க்கலாம். மிகப் பழமையான ஒரு மேற்கொள் இது என்பதிலிருந்து, இப்பாடலின் தொன்மை புலனாவதோடு கூட, விநாயகர் வழிபாட்டின் தொன்மையும் புலனாகிறது அல்லவா!

காப்பிய ஆசிரியர்கள் தவிர, இலக்கண ஆசிரியர்களுமே தங்கள் நூல்களைத் தொடங்குவதற்கு ஆரம்பமாக, முகப்பிலேயே விநாயகரை வணங்குகின்ற முறை, எத்தனை நூற்றாண்டுகளாக நமது தமிழகத்தில் பயின்று வந்துள்ளது என்பதற்கு இது ஒரு சான்றாகும். இதே பாடலை முத்தொள்ளாயிர நூலின் காப்புச் செய்யுள் என்றும்கூட அறிஞர் உலகம் கூறுகிறது. புறத்திரட்டு என்னும் பழமையான தொகை நூலில் இவ்வாறே காணப்பெறுகிறது.

நான்கு தோள்களும் தாழ்ந்து நீண்ட ஒரு கையும் கொண்ட ஒரு பெரிய யானை உலவுகின்ற காடு என்கிறார் தனது நெஞ்சை. இந்த மனக்காடு அந்த யானை உலவுவதால் ஒளிப்பெற்றுத் திகழ்கிறது என்பதே கருத்து.

இதே போன்று தொல்காப்பியத்திலும், தமிழ்நாவலர் சரிதையிலும், உரிச்சொல் நிகண்டு போன்ற நூல்களின் தொடக்கத்திலும் காணப்பெறுகின்ற இரண்டு பாடல்கள் தமிழ்ப் புலவர்களால் போற்றப்பெற்று வந்துள்ளன. அவை பின்வருமாறு:

எண்ணிய எண்ணியாங் கெய்துப கண்ணுதற்
பவள மால்வரை பயந்த
கவள யானையின் கழல்பணி வோரே

இந்தப் பாடலின் முதலாவது அடி திருவள்ளுவரின் திருக்குறளில் அப்படியே பயின்று வருவதைப் பார்க்கிறோம். திருக்குறளுக்கு முந்தியதா, பிந்தியதா என்பது அல்ல கேள்வி. இந்த மரபு தொன்மையானது என்பதே நமக்கு இவ்விடத்தில் முக்கியமான செய்தியாகும்.

நெற்றிக் கண்ணையுடைய பவள மலையாகிய சிவபெருமானுடைய பிள்ளை விநாயகன். தந்ததையைப் பவளமால்வரை என்கிற பாடல் பிள்ளையைக் கவள யானை என்கிறது.

அடுத்த பாடல் ஒரு நேரிசை வெண்பாவாகும்.

மதிபாய் சடைமுடித்து மாசுணப்பைம் பூட்டுச்
சதிபாய் குறுந்தாட்டுத் தான - நதிபாய்
இருகவுட்டு முக்கட்டு நால்வாய்த்தென் உள்ளம்
உருகவிட்டு நின்ற ஒளி

இந்த பாடலின் சொற்களும், அவற்றின் ஆட்சியும், அவற்றின் தலைப்பூட்டுக்களும் பாடலின் தொன்மைக்குச் சான்றுகளாம். மிகப்பழமையான பாடல் என்பதற்கு இவையே தக்க அகச்சான்றுகளாக விளங்குவதோடு, விநாயக வழிபாட்டின் பழமைக்கும் சான்றாம். இந்தப் பாடலும் விநாயகரை மதியும் சடைமுடியும் பாம்புமாகக் கோலம் தருகிற முக்கட்பெருமானின் சேயே விநாயகன் என்பதைச் சித்திரிக்கிறது. அதனோடு எப்போதும் மதநீர் பாய்கின்ற கன்னங்களை உடைய யானை என்று இந்தப்பாடல் விநாயகரை ஏத்துகிறது.

இனி, தண்டியலங்கார உரையில் மேற்கோளாக வருகிற இன்னொரு பழைய பாடலும் விநாயகரைப் பற்றியதே.

மானமருங் கண்ணாள் மணிவயிற்றில் வந்துதித்தான்
தானவரை யென்றுந் தலையழித்தான் - யானைமுகன்

ஒட்டினான் வெங்கலியை உள்ளத் தினிதமர்ந்து
வீட்டினான் நம்மேல் வினை.

உமை அம்மையின் மைந்தனாய் வந்துதித்த விநாயகன் அசுரர்களைத் தலையழித்ததோடு வெம்மையான கலியை ஓட்டினான். அதனோடு உள்ளத்தில் இனிதாக அமர்ந்துகொண்டு, நம் மீது சார்கின்ற வினையை வெருட்டினான் என்று விநாயகரை வழிபடுகிறது இந்தப் பழம்பாடல். இந்தப் படாலில் உமை அம்மையின் கண்ணை மான் அமர்ந்துள்ள கண் என்று மொழிகின்ற கவி எழில், உணர்ந்து இன்புறற்பாலது.

இனி, இன்னொரு பழைய வெண்பாவைப் பார்ப்போம். இது, வீரசோழியம் உரையிலும் தண்டியலங்கார உரையிலும் காணப்பெறுகிற விநாயகர் புகழ்ப்பாவாகும். இந்தப் பாடல் புழை உடைய நீண்ட கை கொண்ட மலை (தடக்கைப் பொருப்பு) என்று தும்பிக்கை விநாயகனை அழைக்கிறது.

மலை என்று சொல்லியதால் மலைமீது தோன்றுகிற பிற காட்சிகளையும் இந்தப்பாடல் ஓவியமாக வரைகிறது. தேன் பிலிற்றுகின்ற கொன்றையைப் பொன்னாகவும் (மலைபடுபொன் என்பது சங்கநூற்

கோட்பாடு), செஞ்சடையைப் பவளக்கொடியாகவும், மதநீரை மழையாகவும், கொம்பினைப் பிறைச்சந்திரனாகவும் கொண்டு, இந்தக் கவிஞரின் கண்முன் விநாயகராகிய களிறு காட்சி தருகிறது:

தேனக் கலர்கொன்றை பொன்னாகச் செஞ்சடையே
கூனற் பவளக் கொடியாகத் - தானம்
மழையாகக் கோடு மதியாகத் தோன்றும்
புழையார் தடக்கைப் பொருப்பு

இனி, தொல்காப்பியம் செய்யுளியலில் வருகின்ற மேலும் ஒரு பாடல் வருமாறு:

தடந்தாட்கு ஒத்த தமனியச் சிலம்பு
படந்தாழ் கச்சைப் பாம்பொடு மிளிர
வென்றாடு திருத்தாதை வியந்துகை துடிகொட்ட
நின்றாடு மழகளிற்றை நினைவாரே வினையிலரே

பெருமை பொருந்திய நீண்ட கால்களை உடைய சிவபெருமான் அந்தப் பெருமைக்கு ஏற்பக் காலிலே பொற்சிலம்பு அணிந்திருக்கிறான். பாம்புதன் படமே அவனுக்குக் கச்சையாக அமைந்திருக்கிறது (கச்சை - இக்காலத்து இலங்கோடு). அவன் மன்றிலே நின்று குதித்தாடுகிறான். நடராச மூர்த்தியின் தாண்டவம் வெற்றிக் கூத்தல்லவோ! அந்தத் தெய்வக் கூத்தனின் வியப்புக்கு உள்ளாகிறது மகனுடைய நடனம். வென்றாடும் கூத்தனாகிய தந்தை, நின்றாடும் மகனின் நடனத்தை வியந்து, விநாயகனாகிய அந்த மகனுடைய நடனத்துக்கு ஏற்றவாறு கையிலுள்ள உடுக்கையை முழக்குகிறான். அந்த நின்றாடும் மழகளிற்றை நினைப்பவர்களுக்கு வினை இல்லை. ஏனென்றால் அவன் வினைதீர்த்த விநாயகன்.

இனி, பல நூற்றாண்டுகளாகத் தமிழகத்திலே வழங்கி வருகின்ற மிகத் தொன்மையான ஒரு பாடல், வெண்பா, வருமாறு:

திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொற்
பெருவாக்கும் வீடும் பெருக்கும் - உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலாற் கூப்புவர் தம் கை.

இந்தப் பாடல் நம் தமிழகத்திலே நீண்ட நெடுங்காலமாக எல்லாச் சார்பினராலும் இலக்கியத்திலும் வழிபாட்டிலும் ஒருசேரப் பயின்று வந்துள்ளதற்கு அடிப்படையான காரணம் என்னவென்றால், விநாயகனை வழிபடுவதனால் எத்தகைய நற்பலன்கள் விளைகின்றன என்பதை எடுத்துச்சொல்லி, ஓதுபவருடைய உள்ளத்திலே ஊக்கத்தையும் எழுச்சியையும் இந்தப் பாடல் உண்டாக்குகிறது. அதனோடு உலக வழக்கிலே இது ஒரு பழம்பாடல் என்று பொதுவாக வழங்கினாலும், இது பதினோராம் திருமுறையில் வருகிற ஓர் அழகிய பாடலாகும்.

விநாயகரை வழிபடுவதனால் செல்வம் உண்டாகும். செய்கின்ற செயலில் வெற்றி கிடைக்கும்.நாவிலே செஞ்சொல் வாக்கு உதிக்கும்.

பெருமை வளரும். இவை மட்டுந்தானா? நம்மைப் பார்ப்பவருக்கு நம்மிடத்திலே மதிப்பும் மரியாதையும் ஏற்படக் கூடிய வகையில் நம்மிடத்தில் உட்கு எனப்படுகிற உரு (உரு உட்காகுமே என்பது தொல்காப்பியம்) உண்டாகிறது.

இந்த உரு அல்லது உட்கு அன்போடு சேரும் பொழுது அதுவே பயபக்தியாக மிளிர்கிறது. ஆதலால் வானவர்களும் ஆனைமுகத்துக் கடவுளைக் காதலோடு கைகூப்பித் தொழுகிறார்கள், என்கிறது பதினொராம் திருமுறை.

தண்டியலங்காரம் என்னும் இலக்கண நூலிலே விநாயகருக்கும் மலைக்கும் சிலேடையாக இயற்றப் பெற்றுள்ள ஒரு வெண்பா காணப்பெறுகிறது. அந்தப் பாடல்:

அம்பொற் பனைமுகத்துத் திண்கோட் டணிநாகம்
வம்புற்ற வோடை மலர்ந்திலங்க - உம்பர்
நவம்புரியும் வானதியு நான்மதியு நண்ணத்
தவம்புரிவார்க் கின்பந் தரும்.

இலக்கண நூல்களிலும் இலக்கிய நூல்களிலும் தொடக்கத்தில் விநாயகரை வணங்குகிற இந்த மரபு, இரண்டாயிரம் ஆண்டுகளாக நமது தமிழகத்திலே பேணிப் பாதுகாக்கப்பட்டு வந்துள்ளது. பல்லவர் காலத்துக்குப் பின்னர் இந்த விநாயகர் வழிபாடானது வளர்ந்தோங்கிப் பல்கிற்று என்பதை வரலாற்றிலே காண்கிறோம்.

நான்கு தெருக்கள் கூடுகின்ற சந்திகளிலும், ஆற்றங்கரை அரச மரங்களின் அடியிலும் விநாயகரை வழிபடுகின்ற வழக்கம் இன்றளவும் நம் தமிழகத்திலே மேலோங்கி நிற்கிறது.

இன்னும் உய்த்து ஆராய்ந்து பார்த்தோமானால் உழவர்களுடைய நாகரிகத்திலே, எலியின் மீது இவர்கிற விநாயகமூர்த்திக்கு ஒரு தனி இடம் இருந்து வருகிறது. பயிர்களை எலித்தொல்லைகளிலிருந்து பாதுகாத்துக் காப்பாற்றுபவனும், விளைச்சலைப் பெருக்குபவனும் விநாயகமூர்த்தி என்கிற நம்பிக்கை, தும்பிக்கையோடு இணைந்து இன்றளவும் நின்று நிலவக் காண்கிறோம். உழவர் உலகின் பல நாட்டுப்புற நாடோடிப் பாடல்களிலே இத்தகைய பிள்ளையார் பாடல்கள் ஏராளமாக உள்ளன.

புராணக் கதைகள் ஒருபுறம் இருக்க, விலங்குகளிலே மிகப்பெரியதும், மிகுந்த வல்லமை கொண்டதும், புலால் உணவு உண்ணாததும், உழவனுடைய விளைச்சலையே உண்டு வலிமை பெற்றுள்ளதுமான விலங்கு ஆனை என்பதால், உழவுப் பெருங்குடி மக்களுக்கு யானை முகத்தில் ஒரு தனியான ஈடுபாடு ஏற்பட்டிருப்பது இயல்பே ஆகும். காடும் காடு சார்ந்த நிலமுமான முல்லையும், வயலும் வயல் சார்ந்த நிலமுமான மருதமும் விநாயகரை மரநிழலிலும் தெரு முனையிலும் வைத்து வணங்கி வந்திருக்கின்றன.

திருச்சி மலைக்கோட்டையிலும், வேறு சில குறிஞ்சி நிலக் கோயில்களிலும் விநாயகர் மலைமீது கோயில் கொண்டிருப்பதையும் காணு

கிறோம். பொருநை நதி சங்கமிக்கிற சங்குமுகம் போன்ற நெய்தல் நிலங்களிலும் ஒரோவழி விநாயகர் கோயில் கொண்டிருப்பதையும் பார்க்கிறோம்.

இலக்கியப் புலவர்கள் முழுமுதற் கடவுளாக வணங்கியது போலவே, பொதுமக்களும் முழுமுதலாக அவனை வணங்கி வருகிறார்கள். எனவே நூல் செய்யும் புலவர்கள் தொடக்க வணக்கமாக அவனை வணங்குவது போலவே, சமுதாய வாழ்விலும் விநாயகன் முதல் இடத்தைப் பெற்று வந்திருக்கிறான். வினைகளை நீக்குபவனும், விக்கினங்களைப் போக்குபவனும் ஆன இம்மூர்த்தியை வினைத்தீர்க்கும் விநாயகன் என்றும், விக்னேசுவரன் என்றும் புலவர் உலகம் அழைக்கிறது. விக்கினத்தைக் கொடுப்பவனும் கெடுப்பவனும் இவனே.

நூல்களின் வணக்கப் பாடல்களாக வருகின்ற தொடக்கப் பாடல்களைத் தவிர, பதினோராம் திருமுறையில் காணப்படுகின்ற கபிலதேவ நாயனார் பாடல்களும், அதிரா அடிகளின் பாடல்களும் தனித்தனி நூல்களாகவே எழுந்துள்ளன. அவை அன்று தொட்டு இன்று வரை வழிபாட்டில் ஓதப்பெற்றும் வருகின்றன.

தமிழகத்தின் வரலாற்றில் விநாயகருடைய வழிபாடு உழவர்களின் வாழ்வோடு இணைந்த நிலையிலே தொடங்கிச் சமுதாய நடைமுறையிலே பின்னியிருந்த தருணத்தில், பரஞ்சோதியார் வாதாபி சென்று வெற்றியுடன் வாதாபி கணபதியைத் தமிழ்நாட்டுக்கு கொண்டுவந்து இந்த மண்ணிலே நிறுவியபோது, இந்தத் தொன்மையான வழிபாட்டுக்கு மேலும் ஒரு மறுமலர்ச்சியை உண்டாக்கினார் என்று சொல்ல வேண்டும். இதன் காரணமாக விநாயகர் வழிபாட்டிலே வகைகளும் முறைகளும் பலவாறாக விரிந்தன. விநாயகரின் உருவங்களிலும் பற்பல வேறுபாடுகளும், வழிபாட்டுச் சடங்குகளிலே பற்பல விதிமுறைகளும் பல்கிப் பெருகின. ஆறு பிரிவுகளைக்கொண்ட இந்து சமயத்தில் 'காணாபத்யம்' என்று ஒரு தனிச் சமயமே உருவாயிற்று.

ஒவ்வொரு நிலைக்கு ஏற்ப ஒவ்வொரு மூர்த்தியை வழிபடுவது என்ற விதியை மேற்கொள்ளாமல் எல்லா நிலைகளுக்கும் எல்லாக் கோரிக்கைகளுக்கும் கணபதியின் வழிபாட்டிலேயே பல உருவ மாறுதல்களையும், கோல வேறுபாடுகளையும், அணிபணிகளையும் இணைத்து வழிபாட்டு விதிமுறைகளையும் அவற்றிற்கு ஏற்ற முறையில் விரிவுபடுத்தி, இத்தனையையும் உள்ளடக்கி 'காணாபத்யம்' என்ற கோட்பாடு, முழுமையும் விநாயகர் வழிபாடாக நிலைபெற்றது.

இந்த மாறுபாடுகளில் முப்பத்திரண்டு உருவ வேறுபாடு தோன்றி வளர்ந்தன. அவை வருமாறு:

1. பால கணபதி
2. தருண கணபதி
3. பக்தி கணபதி
4. வீர கணபதி
5. சக்தி கணபதி
6. துவிஜ கணபதி
7. சித்தி கணபதி
8. உச்சிஷ்ட கணபதி
9. விக்கின கணபதி
10. க்ஷிப்ர கணபதி
11. ஏரம்ப கணபதி
12. லக்ஷ்மி கணபதி

13. மகா கணபதி
14. விஜய கணபதி
15. நிருத்த கணபதி
16. ஊர்த்துவ கணபதி
17. ஏகாக்ஷர கணபதி
18. வர கணபதி
19. திரயாக்ஷர கணபதி
20. க்ஷிப்ர ப்ரசாத கணபதி
21. ஹரித்ரா கணபதி
22. ஏகதந்த கணபதி
23. சிருஷ்டி கணபதி
24. உத்தண்ட கணபதி
25. ரண மோசன கணபதி
26. துண்டி கணபதி
27. துவிமுக கணபதி
28. திரிமுக கணபதி
29. சிங்கமுக கணபதி
30. யோக கணபதி
31. துர்க்கா கணபதி
32. சங்கட ஹர கணபதி

வடமொழி மரபும் தமிழ்மரபும் இணைந்து பல வழிபாடுகள் தோன்றிய காலம் தொடங்கி, காணாபத்ய மதத்திலும் இந்த வேறுபாடுகள் உண்டாயின. விநாயகரை வழிபடுகிற வடமொழி மந்திரங்களிலும் பதினாறு மந்திரங்கள் முக்கிய இடம் பெற்றன. இவ்வாறு பதினாறு பிரிவுகள் தோன்றிய போதிலும், விநாயகரின் வடிவம், ஓம் என்ற, மொழிபேதம் கடந்த அடிப்படை ஒலியின் அதிர்வு வடிவமே என்பதைச் சித்தர்கள் நமக்கு வலியுறுத்திக் கூறுகிறார்கள்.

எல்லா மந்திரங்களினுடைய குறிக்கோளும் ஒலியின் அதிர்வு என்பதே சித்தர் மெய்ஞ்ஞானமாகும்! எனவே, உலக மொழிகள் அனைத்திற்கும் அடிப்படையான ஒலிகளாகிய அ,உ, ம் என்ற மூன்று ஒலிகளாலும் ஒன்றி நிற்கின்ற ஓம் என்ற ஆதார ஒலியே விநாயகர் என்பதை அடிக்கோடிட்டு வரைகிற சித்தர் இலக்கியம், விநாயகர் என்ற மூர்த்தியை உலகப்பொதுக் கடவுளாகவே சொல்லாமல் சொல்லி நிலைநிறுத்துகிறது.

உலக மக்கள் அனைவருக்கும், உலக நாடுகள் அனைத்திற்கும், உலக மொழிகள் அனைத்திற்கும், பொதுவான அகரமும் உகரமும் மகரமும் இணைந்து, இந்த ஓம் என்ற ஒலி அதிர்விலே தோன்றுகின்ற ஒலியாகிய விநாயகரே ஆன்ம நிலையிலே உதிக்கின்ற பேரின்பப் பரம்பொருள் என்னும் மாபெரும் இரகசியத்தைச் சித்தர் இலக்கியம் மெய்ப்பித்துக் கூறுகிறது. இதையே அவ்வையார் தம்முடைய குறளில் விளக்கியிருப்பதோடு, அகவலை மொழிச் சான்றாக இயற்றித் தந்திருக்கிறார் .

இதுவே நாதம் என்ற ஒலியாகவும் , விந்து என்ற ஒளியாகவும், வான மண்டலத்திலே நுண்துகள் அதிர்வாகவும், நுண்ணொளிப் பிழம்பாகவும் யோகிகளின் தியானத்தில் கூடுகிறது. இதற்கு விளக்கம் கூறுகிற பல பெரியோர்கள் அகரம் என்ற ஒலி யோகியினுடைய உள்ளத்தின் எண்ணம் என்றும், உகரம் அவனுடைய யோகச் செயல் என்றும், மகரம் உயிர் ஆற்றல் என்றும் எடுத்து விளக்கியுள்ளார்கள்.

சிவஞானிகள் அதற்கு மேலும் ஒரு விளக்கமாக அகரமாகிய எண்ணத்தைச் சிவன் என்றும், உகரமாகிய செயலைச் சக்தி என்றும், மகரமாகிய பாசத்தை உயிர் என்றும் கூறினார்கள். இக்கருத்தையே ஓங்காரமாகிய ஓம் என்ற ஒலியின் விளக்கமாக,

இறை சத்தி பாசம் எழில்மாயை
ஆவியுற நிற்கும் ஓங்காரத்துள்

என்று 'திருவருட்பயன்' பாடுகிறது.

இதனையே பதஞ்சலி முனிவரும் 'ஓம் என்ற ஒலி உலகின் வித்தே கணபதி' என்று விளக்குகிறார். இந்த ஓங்கார ஒலியையே இந்து சமயத்தினர் 'பிரணவம்' என்று அழைத்து, அந்தப் பிரணவத்தைச் சைவர்கள் சிவம் என்றும், சக்தி என்றும் இணைத்தார்கள்.

வைணவர்கள் பிரணவத்தை விஷ்ணு என்றார்கள். கௌமாரர்களாகிய குமரபக்தர்கள் பிரணவத்தை 'ஸ்கந்தன்' என்றார்கள். சூரிய வழிபாட்டினர் பிரணவத்தைச் சூரியன் என்றார்கள். புற மதத்தினரும் ஓம் என்ற ஒலியே முதல் நிலை என்று கொண்டு, பிரணவத்தைப் பற்பல கடவுட் பெயர்களிலே அழைக்கிறார்கள். கிறித்தவர்கள் ஓதுகிற 'ஆமென்' என்பதுவும் இதுவே என்பதும் அறிஞர் வாக்கு.

ஆகவே, உலகப் பொதுக் கடவுள் பிரணவத்தின் வடிவம் என்பதும், உலகெங்கிலும் முதல் ஒலியாக நிற்பது இதுவே என்பதும், உலகப் பெரியோர்கள் அனைவரும் ஒருமித்துக் கூறுகிற மொழியாகும்.

விநாயகரின் வழிபாடும் பூசனை முறையும் விரிவும் தொகையும் கொண்டதாய் இத்தனை பரந்து காணப்படினும் விநாயக மூர்த்தியானவர் தமிழகத்தில் எளிமைக்கும் எளிமையாக, பெண்டுகளும் பிள்ளைகளும் ஆடம்பரச் சடங்குகள் ஏதுமின்றி விரைவோடும் முனைப்போடும் வணங்குகிற தெய்வமாக விளங்குகிறார். ஒரு பிடி சாணத்தை உள்ளங்கையால் உருட்டி அதன் தலையிலே அறுகம் புல்லைச் செருகிவிட்டால், வழிபடுவதற்குரிய விநாயகர் நம்முன் கோயில் கொண்டுவிடுகிறார். பெண்கள் மஞ்சட்பொடியை எடுத்து மூன்று விரல்களினால் பிடித்து வைத்துவிட்டாலும் அங்கே விநாயகர் வந்து அமர்ந்துவிடுகிறார்.

கடவுள் ஒரு புல்லில் இருக்கிறான் **(He is a blade of grass)** என்று ஓர் ஆங்கில ஞானி கூறுகிறான். அவ்வாறு நம்முடைய வீடுகளுக்குள்ளே வந்து அமர்ந்து கொள்கிறார் விநாயகர் .

இத்தனை எளிமையான, உலகெங்கும் விரிந்து பரந்த ஆனைமுகக் கடவுளைச் சித்தர்கள் தமது உலகளாவிய நோக்கிலே, ஒலி வடிவிலே கண்டு துதித்துள்ள மரபை ஒட்டி, சித்தர்களுக்கெல்லாம் சித்தராகிய திருமூலரும் தமது திருமந்திரத்தின் தொடக்கத்தில் ஆனை முகனை அறிவு வடிவிலே கண்டு வணங்கி வழிபடுகிறார்.

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே

என்பது திருமந்திர நூலின் முதலாவது வணக்கப்பாடல்.

ஆனையின் நான்கு கால்களே விநாயகருக்கு நான்கு கைகள் ஆகின்றன. துதிக்கை ஐந்தாவது கையாகிறது. இளம்பிறைச்

சந்திரனைப்போன்று (இந்தின் இளம்பிறை. இந்து - சந்திரன்) தந்தம், எயிறு, ஆனைமுகத்திலே காட்சி தருகிறது. இந்த விநாயகன் நந்தி ஆகிய சிவபெருமானுடைய (நந்தி- சிவன் என்பது சித்தர் மரபு) மைந்தன்; நந்தி மகன். அவன் ஞானயோகிகளுக்கு ஞானக் கொழுந்தாகிய ஒளிப்பிழம்பாகக் காட்சி தருபவன். அந்த ஒளிப்பிழம்பை அறிவுக்கு அறிவான ஆன்ம வடிவிலே வைத்து வணங்குவதே சித்தர்களின் ஞான நன்னெறியின் பூசனை முறையாகும். இதைத்தான்,

புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே

என்றார் திருமூலர். (புந்தி - புத்தி, அறிவு).

சித்தர் இவ்வாறு ஞான பூசையிலே வழிபடுகிற பிரணவ வடிவமாகிய விநாயகக் கடவுளாகிய ஒளிப்பிழம்பை, சன்மார்க்கம் என்ற நெறிக்கு இசைய அறிவிலே வைத்து, அறிவின் வடிவமாக நிறுத்தி, இதை வணங்கிப் பாடினார் திருமூலர்.

இதையே தோத்திர முறையிலிருந்து பாடுகிற அவ்வையார் பிறிதோர் இடத்திலே, பெண்டுகளும் குழந்தைகளும் மனித சமுதாயமும், இணைந்து ஒருமித்து வழிபடுகிற பொதுமக்களின் குடிமுறை வழிபாட்டு நெறிக்கு இசையக் கீழ்கண்டவாறு பாடுகிறார்; எல்லாருக்கும் நன்கு தெரிந்த ஓர் எளிய வெண்பா.

பாலும் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலும் கலந்துனக்கு நான் தருவேன் - கோலஞ்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீயெனக்குச்
சங்கத் தமிழ் மூன்றும் தா.

இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழையும் தரவல்ல மூர்த்தியே விநாயகர். முத்தமிழும் ஒலி வடிவானது. அந்த ஒலிவடிவின் ஆதாரமே அகர உகர மகரங்களாகிய ஒலிச்சேர்க்கையான ஓம் என்ற அடிப்படை ஒலியாகும். அந்த ஒலியின் வடிவே விநாயகர். எனவே, ஒலியின் விரிவுகளாகிய முத்தமிழையும் தரவல்லவன் அவனே ஆகிறான். ஆகையால் ஒளி பெறுவதற்கு ஒலியை வணங்குகிறது அவ்வையின் தமிழ்.

பூசனை முறையிலே வணங்குவதால் நிவேதனமாகிய படையலை முன்வைக்க வேண்டும் அல்லவா! அந்த முறையிலே நான்கைக் கொடுத்துவிட்டு மூன்றைக் கேட்கிறார் அவ்வையார். பாலும், தேனும், வெல்லப் பாகும், பருப்பும் ஆகிய நான்கை உனக்கு நான் தருகிறேன். எனக்கு நீ மூன்று தமிழைக்கொடு என்று மிக எளிய முறை யிலே வருகிறது அவ்வையாரின் வரம் வேண்டல்.

அவ்வையினுடைய பண்பாட்டின் அடிப்படையே மூன்று தமிழையும் வரமாக வேண்டுகிற கோரிக்கைதான். இந்தப் பொதுமக்களின் புலவராகிய அவ்வையாருக்கு இலக்கிய வரங்களை விநாயகன் ஈந்தான் என்ற அடிப்படையை மனத்தில் நாம் நன்கு பதிய வைத்துக்கொண்டு, விநாயகர் அகவலை அணுகவேண்டும். பாலும் தேனும் பாகும் பருப்பும் தந்து, எந்த மூர்த்தியிடம் அவ்வையார் வரம் கேட்

டாரோ, அதே மூர்த்திக்கு, ஒரு தனி நூல் செய்து, தமது குறட்பாவிலே பாடம் நடத்திய அத்தனை ஞான உண்மைகளையும் சேர்த்துப் பொதிந்து வைத்து, ஒரு தோத்திர நூலாக அவர் வடித்துத் தந்து, எல்லாப் பொதுமக்களும் எல்லாக் காலத்திலும் எளிய வழிமுறையிலே வணங்கி ஓதக்கூடிய யாப்பிலே, இரகசியங்களையும் கோரிக்கைகளையும் அவர் தமது கவிப் பின்னலாக நெய்து கொடுத்தார். இந்த மொழி நெசவே தோத்திர நூலாக விளங்குகிற விநாயகர் அகவல்.

கவிதைக்குக் கவிதையாகவும், இசைப் பாடலுக்கு இசைப் பாடலாகவும், மந்திரத்திற்கு மந்திரமாகவும் விளங்குவதோடு மக்கள் சமுதாயத்தை உய்விக்கத் தோன்றிய ஓர் அரிய தோத்திர நூலாக இது ஒளிவீசுவதால், சித்தர்களும் பக்தர்களும், ஞானிகளும் மோனிகளும், யோகிகளும் போகிகளும், புரவலரும் இரவலரும், மேதைகளும் பேதைகளும் அனைவரும் ஆராதிக்கின்ற ஒரு பெருமை, இந்த நூலுக்கு இருப்பதால் சித்தர்கள் தமது இலக்கியத்திலே அவ்வையின் அகவலை மனித மனத்தின் மேம்பாட்டுக்குரிய ஒரு வழிப்பாட்டு நூலாக எடுத்தாண்டார்கள்.

5. விநாயகர் உருவின் தத்துவம்

விநாயகர் அகவலைப் புரிந்துகொள்வதற்கு முன், விநாயகர் உருவததில் பொதிந்துள்ள தத்துவங்களை ஆராய்ந்து பார்த்துக் கொள்வது பயனுடையதாகும். ஏனென்றால் அவ்வையார் தமது அகவலிலே ஞானப் பேருண்மைகளை எடுத்துக் கூறும்பொழுது, விநாயகர் உருவத்தை உறுப்பு உறுப்பாக அலகு பிரித்து அந்த நுட்பங்களை உருவக மொழிகளிலே கூறுகிறார். எனவே விநாயகரின் அங்கங்களிலே முக்கியமானவற்றின் ஞான உட்பொருளை உணர்ந்து கொள்வது அவசியமாகும்.

இறைவனுடைய உருவங்களிலே எல்லா வடிவங்களுக்கும் பொதுவாக உள்ளது திருவடியின் தத்துவமாகும். திருவடிஞானம் என்றே இதனைப் பாடுகிறார் திருமூலர். நாடுகின்ற அடியார்களின் அல்லல்களை நீக்குவதற்குத் தக்க புகலிடமாக விளங்குவது இறைவனுடைய திருவடியே ஆகும். இதனால்தான் திருவடியை நாடுதல் என்றும், திருவடியில் நம்மை ஒப்புவித்தல் என்றும் பக்தி நூல்கள் ஒரு மரபை நமக்கு உணர்த்துகின்றன. **'Grace'** என்று ஆங்கில ஞான நூல்கள் உணர்த்துகின்ற திருவருளுக்கு நிலையமாக விளங்குவது இறைவனுடைய திருவடியே ஆகும்.

விநாயகர் உருவத்தில் இந்தத் திருவடிக்கு வேறொரு சிறப்பைச் சித்தர்கள் கூறுகிறார்கள். குமரகுருபர சுவாமிகள் ஞானத்தின் உருவமாக இறைவனைக் கண்டு பாடும்பொழுது 'ஞானம் திருவடியா' என்றே பாடுகிறார். ஞானத்தின் உருவமாக அமைந்த விநாயகருக்கு ஞானமே திருவடியாகிறது. ஞான முறையிலே பூசனை செய்கின்ற சித்தர்கள் மரபிலே, ஞானமே திருவருளாகவும், திருவருளே ஞானமாகவும் கூடு விட்டு கூடு பாய்வதால் விநாயகரின் திருவுருவிற்கு ஞானத்தின் சின்னமாக விளங்குவது திருவடியாகும்.